2. வினாக்கள்—விடைகள்.

உடுகுறியிட்ட வினாக்கள்.

Complaint against the President of Chembanoor Panchayat.

* 254 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the **Hon. the Minister for Education and Local Administration** be pleased to state—

(*a*) whether a misappropriation complaint has been received **against the President of Chembanoor Panchayat, Kallal Panchayat Union, Tiruppattur taluk of Ramanathapuram district; and**

(*b*) if so, the action taken thereon?

செம்பனூர் ஊராட்சி மன்றத் தலைவர் மீது புகார்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பனூர் ஊராட்சி மன்றத் தலைவர் மீது கையாடல் புகார் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வந்துள்ள புகார் மனுமீது எடுத்துக்கொண்ட நடவடிக்கையிலிருந்து, செம்பனூர் ஊராட்சித் தலைவர் பணம் ஏதும் கையாடல் செய்ததாகத் தெரியவில்லையென்று மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார். ஆனால், அவரது பதவிக் காலத்தில் ஊராட்சியின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு ஆறு தணிக்கை மறுப்புக்கள் எழுப்பப்பட்டுள்ளன; அவைகள் மீது தலைவரின் பதில்கள் பெறப்பட்டு தக்க நடவடிக்கைகள் மாவட்ட அலுவலர்களால் எடுக்கப்பட்டு வருகிறது.

Nurseries in Panchayats.

* 255. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the **Minister for Education and Local Administration be pleased to** state—

(*a*) the Panchayats which have opened Nurseries during 1971–72; and

(*b*) the number of children covered by these nurseries-

ஊராட்சிகளில் பாலர் பள்ளிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72-இல் பாலர் பள்ளிகளை ஏற்படுத்திய ஊராட்சிகள் யாவை?

(இ) இப்பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Children affected by "Asthma".

* 256 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of cases of "Asthma" detected in children at the Children's Hospital at Egmore, Madras, during 1970–71 and 1971–72; and

(b) the steps taken to check this infection?

குழந்தைகளுக்கு "ஆஸ்துமா" நோய்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் எத்தனை குழந்தைகளுக்கு "ஆஸ்துமா" நோய் பற்றியுள்ளதெனக் கண்டறியப்பட்டது?

(இ) இவ்வாறு கண்டறிந்த நோய்த் தொற்றினைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ).—

ஆண்டு.	அகப் பிணியாளர்கள்.	புறப் பிணியாளர்கள்.
(1)	(2)	(3)
1—4—1970 முதல் 31—3—1971 வரை ..	75	5,837
1—4—1971 முதல் 31—3—1972 வரை ..	101	8,715

(இ) சுற்றுப்புறங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ளல், ஊட்டக் குறைவை ஈடுசெய்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் நோய் பரவுவது குறைக்கப்படுகிறது.